# IYACHAMY ACADEMY

Institution For Competitive Exam




**Anna Nagar Chennai | Opp VOC Ground Palayamkottai | Swamy Sannathi Tenkasi**

**9952521550 | 9840281550 |9786947055**

www.iyachamy.com

**Join our Telegram:** https://t.me/iyachamyacdemy

**ADMISSION OPEN FOR GROUP 4 EXAMS**

**ONLINE CLASSES & TEST SERIES**

**FOR ADMISSION: 9952521550**

# TNPSC குருப் 4 மற்றும் வீ .ஏ. ஓ விளக்கமான அறிவிக்கை | பாடத்திட்டம் | படிக்க வேண்டிய புத்தகங்கள்| மாதிரி வினாத்தாள்

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு ஒருங்கிணைந்த குருப் 4 மற்றும் வீ.ஏ.ஓ தேர்வுகளுக்கு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இத்தேர்வைப் பொறுத்தவரை ஒரே கட்டமாக கொள்குறித்தேர்வு நடத்தப்படும் . இத்தேர்வின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்**

விண்ணப்பத் தொடக்க நாள் : **30/04/2012**

விண்ணப்பக் கடைசி நாள் : **28/04/2022**

தேர்வு நாள் : **24/07/2022**

**கல்வித் தகுதி** : 10 **ஆம் வகுப்பு** ( **தட்டச்சர் பதவிக்கு தட்டச்சர் முறையான பயிற்சி பெற்று சான்றிதழ் வைத்திருக்க வேண்டும், சுருக்கெழுத்தர் பதவிக்கு சுருக்கெழுத்தர் படித்ததோடு தட்டச்சும் பயின்றிருக்க வேண்டும்.** குடிசை மாற்று வாரிய இள நிலை உதவியாளர் பணியிடத்திற்கு மட்டும் 12 ஆம் வகுப்பு

**தேர்வின் அமைப்பு** : **கொள்குறிவகைத் தேர்வு**

| | |
|---|---|
| **பொதுத்தமிழ்** \ கட்டாயம் | 100 **வினாக்கள்** |
| **பொது அறிவு மற்றும் புத்திக்கூர்மை** | 75+25 |

( **வெற்றிபெற** 6 **முதல்** 12 **வரையுள்ள பள்ளிப் புத்தகங்கள், பழைய வினாத்தாள்கள் போதுமானவை**)

**காலிப்பணியிடங்கள் விவரம்**

| **பதவியின் பெயர்** | **எண்ணிக்கை விவரம்** |
|---|---|
| **கிராம நிர்வாக அலுவலர்** | 274 |
| **இளநிலை உதவியாளர்** | 3590+88 |
| **வரித்தண்டலர்** | 50 |
| **தட்டச்சர்** | 2069 |
| **சுருக்கெழுத்து தட்டச்சர்** | 885 |
| **பண்டகக் காப்பாளர்** | 1 |

| | |
|---|---|
| இள நிலை உதவியாளர், குடிசை மாற்று வாரியம் | 64 |
| இள நிலை உதவியாளர் , வீட்டு வசதி வாரியம் | 39 |
| வரித்தண்டலர், குடிசை மாற்று வாரியம் | 49 |
| தட்டச்சர் , குடிசை மாற்று வாரியம் | 7 |
| மொத்தம் | 7301 |

(இந்த முறை நில அளவையாளர், வரைவாளர் ஆகிய பணியிடங்கள் குருப் 4 தேர்வில் இல்லை)

**வயது வரம்பு குருப் 4 பதவிக்கானது**

| இடஒதுக்கீட்டு பிரிவு | குறைந்தபட்ச வயதுவரம்பு | உச்ச வயது வரம்பு |
|---|---|---|
| தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினர் | 18 | இல்லை |
| பிற்பட்டோர்/ மிகவும் பிற்பட்டோர்/ பிற்பட்டோர் முஸ்லீம் | 18 | இல்லை |
| பொதுப்பிரிவினர் | 18 | 32 |

**கருத்தில் கொள்க:** நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியை விட கூடுதலான கல்வித்தகுதி கொண்டிருந்தால் உச்சபட்ச வயது வரம்பு கிடையாது. அதாவது நீங்கள் 12 ஆம் வகுப்பு படித்திருந்தால் உச்சபட்ச வயது வரம்பு கிடையாது.

**கிராம நிர்வாக அலுவலர் வயது வரம்பு**

| இடஒதுக்கீட்டு பிரிவு | குறைந்தபட்ச வயதுவரம்பு | உச்ச வயது வரம்பு |
|---|---|---|
| தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினர் | 21 | 42 |
| பிற்பட்டோர்/ மிகவும் பிற்பட்டோர்/ பிற்பட்டோர் முஸ்லீம் | 21 | 42 |
| பொதுப்பிரிவினர் | 21 | 32 |

**கருத்தில் கொள்கை:** கிராம நிர்வாக அலுவலர் தேர்வை பொறுத்தவரை பொதுப்பிரிவினரைத் தவிர்த்து அனைவருக்கும் உச்சபட்ச வயது வரம்பு 40 ஆகும். ஆனால் முன்னாள் இராணுவத்தினருக்கு உச்சபட்ச வயது வரம்பு 53. மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகள் வயது வரம்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**தேர்வுக்கட்டண விபரங்கள்**

| இடஒதுக்கீட்டு பிரிவு | கட்டணச்சலுகை | குறிப்பு |
| --- | --- | --- |
| BC /MBC | மூன்று முறை இலவசமாக விண்ணப்பிக்கலாம் | 100 ரூபாய் |
| SC/SC(A) / ST | கட்டணம் செலுத்த தேவையில்லை | பொருந்தாது |
| உடல் ஊனமுற்றோர் | கட்டணம் செலுத்த தேவையில்லை | ஊனத்தின் அளவு 40 % மேல் இருக்க வேண்டும் |
| முன்னாள் இராணுவத்தினர் | இரண்டு முறை மட்டும் | ஏற்கனவே 2 முறை பயன்படுத்தி இருந்தால் பொருந்தாது. |
| ஆதரவற்ற விதவை | கட்டணம் செலுத்த தேவையில்லை | ஆதரவற்ற விதவைக்கான சான்று முறையான அலுவலரிடம் பெற்றிருக்க வேண்டும். |

குறிப்பு: இதற்கு முன் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிதிலிருந்து விலக்கு பெற்றிருந்தும் தேர்வு எழுதாமல் இருந்தாலும் இலவச கட்டணச் சலுகையை பயன்படுத்தியதாகவே கருதப்படும்.

அன்பு நண்பர்களுக்கு வணக்கம் , கிராம நிர்வாக அலுவலர் தேர்வுக்கான அறிவிக்கை வெளியிடப்பட்டது.எனவே அதனை கருத்தில் என்னென்ன புத்தகங்கள் எவ்வாறு படிக்க வேண்டும் என்பதை எனது அனுபவத்தில் இருந்து தொகுத்து அளித்துள்ளேன். இப்பாடத்திட்டம் குருப் 4 மற்றும் வீ.ஏ.ஓ இரண்டிற்கும் பொதுவானது. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சமீபத்தில் தேர்வு முறைகளை மாற்றியமைத்து ,குருப் 4 மற்றும் வீ.ஏ.ஓ ஆகிய இரண்டையும் ஒரே தேர்வாக மாற்றியும் , வெற்றி பெற்றவர்கள் தாங்கள் விரும்பும் பதவியினை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் எனவும் அறிவித்துள்ளது.

**பொதுவான அறிவுரைகள்**

1. முதலில் பள்ளிப்பாடப்புத்தகங்களை முழுமையாக படிக்கவும் திருப்புதலுக்காக மட்டுமே அல்லது ஏதேனும் கூடுதல் தகவலுக்காக வேறு நிறுவனத்தின் பாடக்குறிப்புகளை படிக்கவும்
2. ஒரு நாளைக்கு 5- 7 மணி நேரம் படித்தால் போது உங்களால் வெற்றிபெற முடியும். சிலர் கூறுவது போல் 10 மணி நேரம் படிப்பதென்பது சிறந்ததாக இருக்காது. நாம் எவ்வளவு நேரம் படிக்கின்றோம் என்பதை விட எப்படி படிக்கிறோம் என்பதுதான் முக்கியம். மேலும் அனைத்து நாட்களிலும் உங்களால் ஒரே போல் படிக்க இயலாது சில நாட்கள் அதிக நேரம் படிக்கலாம், சில நாட்கள் குறைவான நேரம் படிக்கலாம் அதைப்பற்றி கவலைப்பட தேவையில்லை. அனைவரும் இது மாதிரி பிரச்சனையை எதிர்கொள்வர்.

3. பாடத்திட்டத்தை மையமாக வைத்தே படியுங்கள் அது உங்கள் தயாரிப்பினை நெறிப்படுத்தும். முடிந்தால் நீங்கள் படிக்கும் இடத்தில் பாடத்திட்டத்தினை நீங்கள் பார்க்கும் படி வைத்தால் சிறப்பாக இருக்கும்.
4. சிலர் பல்வேறு பயிற்சி மையங்களின் பாடக்குறிப்புகள் (மெட்டீரியல்ஸ்) சேகரிப்பர் ஆனால் அவற்றை படிக்க மாட்டார்கள். எனவே நீங்கள் ஏதாவது ஒரு பயிற்சி மையத்தின் பாடக்குறிப்பினை பயன்படுத்துங்கள்.
5. பொதுவாக மொழிப்பாடம் தமிழ் மற்றும் அறிவுக்கூர்மை மற்றும் நடப்பு நிகழ்வுகள் போன்றவற்றில் கவனம் செலுத்தினால் உங்களால் சரியாக 125 கேள்விகளுக்கு இந்த மூன்று பகுதிகளில் இருந்து விடையளிக்க இயலும். இதை கவனத்தில் கொள்ளுங்கள்.
6. கூடுமானவரை பழைய வினாத்தாள்களை அடிப்படையாக வைத்து உங்கள் தயாரிப்பினை மேம்படுத்துங்கள்.
7. பாடப்புத்தகம் தவிர்த்து,மனோரமா பொது அறிவுப் புத்தகம், அல்லது விகடன் பொது அறிவுப் புத்தகம் , ஆங்கிலத்தில் அரிஹந்த் அல்லது லூசெண்ட் பொது அறிவு புத்தகத்தில் ஏதாவது ஒன்றை நீங்கள் கட்டாயம் படிக்கவேண்டும். நீங்கள் இப்புத்தகத்தினை படித்தால் அதிகபட்சம் சராசரியை விட கூடுதலாக உங்களால் 15 வினாக்களுக்கு சரியான விடையளிக்க வேண்டும். டாக்டர் சங்கர சரவணின் பொது அறிவுக் களஞ்சியம் என்ற புத்தகத்தையும் வாசிக்க வேண்டும்
8. நாம் எவ்வளவுதான் படித்தாலும் தேர்வு நாளன்று நாம் 3 மணி நேரத்தில் எவ்வாறு விடையளிக்கப்போகிறோம் என்பதில் தான் இருக்கிறது அங்கு நாம் பண்ணுகின்ற தவறு என்னவென்றால் கேள்வியை தவறாக புரிந்து கொண்டு விடையளிப்பது இதை தவிர்ப்பதற்காக ஏதேனும் ஒரு வினாத்தாள் ( சக்தி அல்லது சுரா )தொகுப்பினை வைத்து ஒவ்வொரு வாரமும் பயிற்சி செய்யுங்கள் .
9. உங்களுக்குதேவையான ,பாடக்குறிப்புகள் (www.iyachamy.com) இணையதளத்தில் பதிவேற்றப்படும்.
10. ஏற்கனவே நீண்ட காலம் படித்துக் கொண்டிருப்பவர்கள் தாங்கள் எந்தப் பகுதியில் பலவீனமாக இருக்கிறீர்களோ அந்தப் பகுதியில் இருந்து படிக்க துவங்குங்கள்
11. புதிதாக படிப்பவர்கள் நீங்கள் உங்களுக்கு பிடித்தமான எளிமையான பகுதியில் இருந்து படிக்க துவங்குங்கள்

## TNPSC குரூப் 4 தேர்வுக்கு

## விண்ணப்பிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை

Go to www. http://www.tnpscexams.in/

1. முதலில் ஒரு முறைப் பதிவில் தகவல் சரியாக இருக்கிறதா என்பதை சரி பார்க்கவும்

2. விண்ணபிக்கும் போது அறிவிக்கைக்கு பிந்தைய நாள் எடுத்த புகைப்படத்தை பதிவேற்றம் செய்ய வேண்டும்
3. புதிய புகைப்படம் மற்றும் கையெழுத்தை டி என் பி எஸ் சி வழிமுறைகளின்படி பதிவேற்றம் செய்க
4. ஒரு முறைப்பதிவில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டி இருந்தால் டி என் பி எஸ் சிக்கு மின்ன்ஞ்சல் அல்லது தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தால் , போதிய ஆவணங்கள் அளித்தபின்பு மாற்றங்கள் 7 நாட்களுக்குள் சரிசெய்யப்படும்.

**விண்ணபிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை**

⇒ 10 ஆம் வகுப்பு , 12 ஆம் வகுப்பு, பட்டப்படிப்பு சான்றிதழ்களை விண்ணப்பிக்கும் போது இரண்டு முறை சரிபார்த்த பின்பே விண்ணப்பத்தில் அத்தகவல்களை பதிவேற்றம் செய்க

⇒ சாதிச் சான்றிதழில் தவறு நிகழாத வண்ணம் கவனத்தில் கொள்க

⇒ தமிழ் வழியில் படித்தோர் அதற்கான சான்றிதழ்களை முறையான வடிவத்தில் பெற்று விண்ணப்பிக்க வேண்டும் ( இத்தேர்வுக்கு 10 ஆம் வகுப்புவரை வாங்கினால் போதுமானது)

⇒ விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதில் முறையான கவனம் செலுத்தி விண்ணபிக்க

மேற்சொன்ன நான்கில் ஏதேனும் தவறு செய்தால் , தேர்வின் எந்த நிலையிலும் நமது விண்ணப்பம் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

**ஏன் முதலில் விண்ணப்பிக்க வேண்டும்**

⇒ தேர்வர் இரண்டு பேர் ஒரே மதிப்பெண் பெற்றால் தரவரிசைப் பட்டியலில் முன்னுக்கு வர வாய்ப்புள்ளது. ஒரெ மதிப்பெண் பெற்றிருக்கும் வேளையில் முதலில் இரண்டு தேர்வர்களின் அதிகபட்ச கல்வித் தகுதியைப் பெற்றிருப்பவர் தரவரிசைப் பட்டியலில் முன் இருப்பார்.

⇒ தேர்வர் இருவரும் அதே உச்ச பட்ச கல்வித் தகுதியைக் கொண்டிருந்தால் அடுத்து வயதில் யார் மூத்தவர் என்பதை வைத்து தரவரிசைப் பட்டியல் தயார் செய்யப்படும்.

⇒ வயது மற்றும் கல்வித்தகுதியில் இருவரும் சம நிலையில் இருக்கும் போது யார் தேர்வுக்கு முதலில் விண்ணப்பித்தார்களோ அதை அடிப்படையாக வைத்து தரவரிசைப் பட்டியலில் முன் இடம் பெறலாம்.

**பாடத்திட்டம்**

**பொது அறிவு**

| கேள்விகளின் எண்ணிக்கை | பாடத்திட்டம் | படிக்க வேண்டிய புத்தகங்கள் |
|---|---|---|
| 15-20 | ✓ Nature of Universe – Measurement of Physical Quantities – General Scientific Laws in Motion – Force, Pressure and Energy – Everyday application of the basic principles of Mechanics, Electricity, Magnetism, Light, Sound, Heat and Nuclear Physics in our daily life.<br>✓ **பேரண்டத்தின் இயல்பு - இயற்பியல் அளவுகளின் அளவீடுகள் - இயக்கவியலில் பொது அறிவியல்** | ✓ 6 முதல் 10 வரை உள்ள அறிவியல் புத்தகம்<br>✓ பழைய வினாத்தாள் / விடைகள்<br>✓ 11& 12 ஆம் வகுப்பில் செல்கள் தொடர்பானவற்றை கவனமாக படிக்கவும் |

| | | |
|---|---|---|
| | **விதிகள் - விசை, அழுத்தம் மற்றும் ஆற்றல் - அன்றாட வாழ்வில் இயந்திரவியல், மின்னியல், காந்தவியல், ஒளி, ஒலி, வெப்பம் மற்றும் அணுக்கரு இயற்பியலின்-அடிப்படை கோட்பாடுகளும் அதன் பயன்பாடுகளும்.**<br>✓ Elements and Compounds, Acids, Bases, Salts, Petroleum Products, Fertilizers, Pesticides, Metallurgy and Food Adulterants.<br>✓ **கனிமங்களும் சேர்மங்களும், அமிலங்கள், காரங்கள், உப்புகள்,பெட்ரோலிய பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், உலோகவியல் மற்றும் உணவில் கலப்படம்**<br>✓ Main concepts of Life Science, Classification of living organisms, Evolution, Genetics, Physiology, Nutrition, Health and Hygiene, Human diseases.<br>✓ **உயிரியலின் முக்கிய கோட்பாடுகள், உயிரினங்களின் வகைப்பாடு,பரிணாமம், மரபியல், உடலியல், ஊட்டச்சத்து, உடல் நலம் மற்றும் சுகாதாரம், மனிதநோய்கள்.**<br>✓ Environmental Science.<br>✓ **சுற்றுப்புறச் சூழல் அறிவியல்.** | |
| 10-12 | ✓ Latest diary of events – National symbols – Profile of states – Eminent personalities and places in news – Sports – Books and Authors.<br>✓ **அண்மை நிகழ்வுகளின் தொகுப்பு - தேசியச் சின்னங்கள் - மாநிலங்கள் குறித்த விவரங்கள் - செய்திகளில் இடம்பெற்ற சிறந்த ஆளுமைகளும் இடங்களும் - விளையாட்டு - நூல்களும் ஆசிரியர்களும்**<br>✓ Welfare Scheme of Government – Political parties and Political system in Tamil Nadu and India.<br>✓ **நலன் சார் அரசுத் திட்டங்கள் - தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் அரசியல் கட்சிகளும் மற்றும் ஆட்சியல் முறைகளும்**<br>✓ Latest inventions in Science and Technology – Geographical Land Marks – Current Socio – Economic issues.<br>✓ **அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் அண்மைக்கால கண்டுபிடிப்புகள் - புவியியல் அடையாளங்கள் - தற்போதைய சமூக பொருளாதார பிரச்சினைகள்** | ✓ தினமணி , தமிழ் இந்து , இந்தியன் எக்ஸ்பிரெஸ் போன்ற செய்திகளில் ஏதாவது ஒரு நாளிதல்<br>✓ தமிழக / மத்திய அரசின் செய்திக் குறிப்புகள்<br>✓ செய்தித்தாள்களில் இடம் பெறும் முக்கிய திட்டங்கள், தீர்ப்புகள் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம்<br>✓ **IYACHAMY ACADEMY**யின் நடப்பு நிகழ்வுகள் தொகுப்பு |
| 5-8 | ✓ Earth Location – Physical Features – Monsoon, rainfall, weather and climate - Water resources – Rivers – Soil, Minerals and Natural resources – Forest and Wildlife - Agriculture pattern | ✓ **6** முதல் **10** வரை உள்ள சமூக அறிவியல் புத்தகத்தில் உள்ள புவியியல் பாடப்பகுதி |

| | | |
|---|---|---|
| | ✓ புவி அமைவிடம் – இயற்கை அமைவுகள் – பருவமழை , மழைப் பொழிவு, வானிலை மற்றும் காலநிலை – நீர் வளங்கள் – ஆறுகள் – மண், கனிம வளங்கள் மற்றும் இயற்கை வளங்கள் – காடு மற்றும் வன உயிரினங்கள் – வேளாண் முறைகள்<br>✓ Transport – Communication<br>✓ போக்குவரத்து - தகவல் தொடர்பு<br>✓ Population density and distribution in Tamil Nadu and India.<br>✓ தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் மக்கள் தொகை அடர்த்தி மற்றும் பரவல்.<br>✓ Calamities - Disaster Management - Environment - Climate change.<br>✓ பேரிடர் - பேரிடர் மேலாண்மை - சுற்றுச்சூழல் - பருவநிலை மாற்றம். | ✓ மனோரம்மா பொது அறிவு\| விகடன் \| அல்லது ஏதேனும் ஒரு பொது அறிவுப் புத்தகம்<br>✓ பழைய வினாத்தாள் தொகுப்பு |
| 5-10 | ✓ Indus Valley Civilization – Guptas, Delhi Sultans, Mughals and Marathas – South Indian History.<br>✓ சிந்து சமவெளி நாகரிகம் - குப்தர்கள், தில்லி சுல்தான்கள், முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள் - தென் இந்திய வரலாறு<br>✓ Characteristics of Indian Culture, Unity in Diversity – Race, Language, Custom.<br>✓ இந்தியப் பண்பாட்டின் இயல்புகள், வேற்றுமையில் ஒற்றுமை - இனம், மொழி, வழக்காறு<br>✓ India as a Secular State.<br>✓ இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு | ✓ 6 முதல் 12 வரையுள்ள வரலாறு பாடப்பகுதிகள் ( 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பாடத்திட்டத்தில் உள்ளவை மட்டும் படித்தால் போதும்)<br>✓ பழைய வினாத்தாள்/ |
| 12-15 | ✓ Constitution of India – Preamble to the Constitution – Salient features of the Constitution – Union, State and Union Territory.<br>✓ இந்திய அரசியலமைப்பு - அரசியலமைப்பின் முகவுரை - அரசியலமைப்பின் முக்கிய கூறுகள் - ஒன்றியம், மாநிலம் மற்றும் யூனியன் பிரேதசங்கள்.<br>✓ Citizenship, Fundamental Rights, Fundamental Duties, Directive Principles of State Policy.<br>✓ குடியுரிமை, அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள்<br>✓ Union Executive, Union Legislature – State Executive, State Legislature – Local Governments, Panchayat Raj.<br>✓ ஒன்றிய நிர்வாகம், ஒன்றிய நாடாளுமன்றம் - மாநில நிர்வாகம், மாநில சட்டமன்றம் - உள்ளாட்சி அமைப்புகள், பஞ்சாயத்து ராஜ். | ✓ 6 முதல் 10 ஆம் வகுப்பு வரையுள்ள குடிமையியல் பகுதி<br>✓ 11 & 12 அரசியல் அறிவியல் புத்தகம்<br>✓ ஏதாவது ஓர் பொது அறிவுப் புத்தகத்தில் உள்ள சமீபத்திய சட்ட திருத்தங்கள், தீர்ப்புகள் போன்றவற்றை உன்னிப்பாக படிக்க வேண்டும்<br>✓ பழைய வினாத்தாள் |

| | | |
|---|---|---|
| | ✓ Spirit of Federalism: Centre - State Relationships.<br>✓ **கூட்டாட்சியின் அடிப்படைத் தன்மைகள் : மத்திய - மாநில உறவுகள்.**<br>✓ Election – Judiciary in India – Rule of Law<br>✓ **தேர்தல் - இந்திய நீதி அமைப்புகள் - சட்டத்தின் ஆட்சி**<br>✓ Corruption in public life – Anti-Corruption measures – Lokpal and Lokayukta – Right to Information – Empowerment of Women – Consumer Protection Forums – Human Rights Charter<br>✓ **பொது வாழ்வில் ஊழல் - ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் - லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா - தகவல் அறியும் உரிமை - பெண்களுக்கு அதிகாரமளித்தல் - நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் - மனித உரிமைகள் சாசனம்.** | |
| 5-8 | ✓ Nature of Indian economy – Five year plan models – an assessment – Planning Commission and Niti Ayog<br>✓ **இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள் - ஐந்தாண்டு திட்ட மாதிரிகள் - ஒரு மதிப்பீடு - திட்டக்குழு மற்றும் நிதி ஆயோக்**<br>✓ Sources of revenue – Reserve Bank of India – Finance Commission – Resource sharing between Union and State Governments – Goods and Services Tax.<br>✓ **வருவாய் ஆதாரங்கள் - இந்திய ரிசர்வ் வங்கி - நிதி ஆணையம் - மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான நிதிப் பகிர்வு - சரக்கு மற்றும் சேவை வரி**<br>✓ Economic Trends – Employment Generation, Land Reforms and Agriculture – Application of Science and Technology in Agriculture – Industrial growth – Rural Welfare oriented programmes – Social Problems – Population, Education, Health, Employment, Poverty<br>✓ **பொருளாதார போக்குகள் - வேலைவாய்ப்பு உருவாக்கம், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் வேளாண்மை - வேளாண்மையில் அறிவியல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு - தொழில் வளர்ச்சி - ஊரக நலன்சார் திட்டங்கள் - சமூகப் பிரச்சினைகள் - மக்கள் தொகை, கல்வி, நலவாழ்வு, வேலை வாய்ப்பு, வறுமை** | ✓ 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள பொருளாதாரப் பகுதி<br>✓ 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பாடத்திட்டத்தில் உள்ளவற்றை மட்டும் படித்தால் போதும்<br>✓ பழைய வினாத்தாள் |
| 10-12 | ✓ National Renaissance – Early uprising against British Rule – Indian National Congress – Emergence of Leaders – B.R.Ambedkar, Bhagat Singh, Bharathiar, V.O.Chidambaranar, Thanthai Periyar, Jawaharlal Nehru, | ✓ 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள வரலாற்றுப் பாடம்<br>✓ 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பாடத்திட்டத்தில் உள்ளவற்றை மட்டும் படித்தால் போதும் |

| | | |
|---|---|---|
| | Rabindranath Tagore, Kamarajar, Mahatma Gandhi, Maulana Abul Kalam Azad, Rajaji, Subhash Chandra Bose, Muthulaksmi Ammaiyar, Muvalur Ramamirtham and other National Leaders.<br>✓ **தேசிய மறுமலர்ச்சி - ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தொடக்க கால எழுச்சிகள் - இந்திய தேசிய காங்கிரஸ் - தலைவர்கள் உருவாதல் - பி.ஆர். அம்பேத்கர், பகத்சிங், பாரதியார், வ.உ.சிதம்பரனார், தந்தை பெரியார், ஜவஹர்லால் நேரு, ரவீந்திரநாத் தாகூர், காமராசர், மகாத்மா காந்தி, மௌலானா அபுல் கலாம் ஆசாத், இராஜாஜி, சுபாஷ் சந்திர போஸ், முத்துலெட்சுமி அம்மையார், மூவலூர் இராமாமிர்தம் மற்றும் பல தேசத் தலைவர்கள்.**<br>✓ Different modes of Agitation of Tamil Nadu and movements.<br>✓ **தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நிலைகள் மற்றும் இயக்கங்கள்.** | ✓ பழைய வினாத்தாள்<br>✓ 75 ஆம் ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டம் தொடர்பான செய்திகளில் கூடுதல் கவனம்<br>✓ முக்கிய நபர்களைப் பொறுத்த மட்டும் கூடுதல் தகவல்களை இணையத்தில் தெரிந்து கொள்க |
| 8-10 | ✓ History of Tamil Society, related Archaeological Discoveries, Tamil Literature from Sangam age till contemporary times.<br>✓ **தமிழ் சமுதாய வரலாறு அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள், சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கியம்.**<br>✓ Role of Tamil Nadu in freedom struggle – Early agitations against against British Rule – Role of women in freedom struggle.<br>✓ **விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு - ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்க கால கிளர்ச்சிகள் - விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு**<br>✓ Various Social reformers, Social reform movements and Social transformation of Tamil Nadu.<br>✓ **தமிழ்நாட்டின் பல்வேறு சீர்திருத்தவாதிகள், சீர்திருத்த இயக்கங்கள் மற்றும் மாற்றங்கள்.**<br>• **மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்**<br>• **அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை**<br>• **மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்**<br>• **திருக்குறளும் மாறாத விழுமியங்களும் - சமத்துவம், மனிதநேயம் முதலானவை**<br>• **சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின்** | ✓ 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள வரலாற்றுப் பாடம்<br>✓ 11 ஆம் 12 வகுப்பு அறவியல் மற்றும் பண்பாட்டுப் பகுதி<br>✓ இலக்கியம் பொதுத்தமிழ் படிக்கும் போது சேர்த்து படிக்கவும்<br>✓ திருக்குறள் பகுதியை நன்கு உள்வாங்கி புரிந்து படிக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| 8-10 | ✓ Social Justice and Social Harmony as the Cornerstones of Socio-Economic Development.<br>✓ **சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்**<br>✓ Education and Health systems in Tamil Nadu<br>✓ **தமிழகத்தின் கல்வி மற்றும் நலவாழ்வு முறைமைகள்.**<br>✓ Geography of Tamil Nadu and its impact on Economic growth.<br>✓ **தமிழகப் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்.** | ✓ பள்ளிப் பாடப்புத்தகத்தில் ஓர் குறிப்பிட்ட அளவு படித்த பின்பு<br>✓ செய்தித்தாள்களில் வரும் திட்டங்கள் மற்றும் அதன் தாக்கம் குறித்து படிக்க வேண்டும் |
| 25 | ✓ Simplification – Percentage - Highest Common Factor (HCF) - Lowest Common Multiple (LCM).<br>✓ **சுருக்குதல் - விழுக்காடு - மீப்பெறு பொதுக் காரணி** (HCF) - **மீச்சிறு பொது மடங்கு** (LCM).<br>✓ Ratio and Proportion<br>✓ **விகிதம் மற்றும் விகிதாசாரம்**<br>✓ Simple interest - Compound interest - Area - Volume - Time and Work.<br>✓ **தனி வட்டி கூட்டு வட்டி - பரப்பு - கொள்ளளவு - காலம் மற்றும் வேலை**<br>✓ Logical Reasoning - Puzzles-Dice - Visual Reasoning - Alpha numeric Reasoning – Number Series.<br>✓ **தருக்கக் காரணவியல் - புதிர்கள் - பகடை - காட்சிக் காரணவியல் - எண் எழுத்துக் காரணவியல் - எண் வரிசை,** | ✓ 6 முதல் **10** வரையுள்ள கணிதம் மற்றும் பழைய வினாத்தாள்களை பயிற்சி செய்து பார்க்க வேண்டும் |

படிக்கும் முறை – வரிவரியாக படிப்பதைப் தவிர்த்து – முழுமையாக் ஓர் தலைப்பைப் படித்தால் மட்டுமே சரியாக விடையளிக்க முடியும் இப்போது வினாக்கள் புரிதலை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்படுகிறது.

உதாரணமாக

## KNOW THE DIFFERENCE BETWEEN ROUTE LEARNING & CONCEPTUAL LEARNING | மனப்பாடக் கற்றல் மற்றும் பொருளணர்ந்து கற்றல் வேறுபாடு

. Which of the below bounds Nagaland on the east?

(A) Assam (B) West Bengal

(C) ✓ Myanmar (D) Manipur

(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் நாகாலாந்துக்கு உள்ள கிழக்கு எல்லை எது?

(A) அசாம் (B) மேற்கு வங்காளம்

(C) மியான்மர் (D) மணிப்பூர்

(E) விடை தெரியவில்லை




Choose the wrong sentence :

(A) An Earthquake is sudden, rapid shaking of the surface of the earth

(B) Earthquakes strike suddenly without warning and can occur at any time

(C) The impacts of the earthquakes include deaths, injuries and damage of property

(D) ✓ Use an electric lift if inside the building during on earthquake

(E) Answer not known

தவறான வாக்கியம் தெரிவு செய் :

(A) நிலநடுக்கம் என்பது புவிப்பரப்பில் ஏற்படும் அதீத புவியதிர்வை குறிக்கும்

(B) நிலநடுக்கமானது எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென்று எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஏற்படலாம்

(C) நிலநடுக்கத்தின் போது பொருட் சேதம், காயங்கள் மற்றும் உயிரிழப்பு போன்றவை ஏற்படும்

(D) நிலநடுக்கத்தின் போது கட்டிடத்தின் உள்ளே இருந்தால் மின்தூக்கிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

(E) விடை தெரியவில்லை

கீழ்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?

கூற்று (A) : பெரியபுராணம் சேக்கிழாரால் எழுதப்பட்டது. மேலும் சீவகசிந்தாமணி கம்பராமாயணம் ஆகியவை சோழர் காலத்தில் படைக்கப்பட்டன.

காரணம் (R) : சோழர் காலம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு புத்துணர்வு தந்தது.

சரியான விடையளி :

(A) (A) சரி ஆனால் (R) தவறு.

(B) (A) தவறு ஆனால் (R) சரி.

(C) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) –விற்கு சரியான விளக்கம்.

(D) (A) மற்றும் (R) இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) – விற்கு சரியான விளக்கமல்ல.

(E) விடை தெரியவில்லை

கூற்று (A) : 42 வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் ஒரு குறு அரசியலமைப்பு என்று குறிப்பிடப்படுகிறது.

காரணம் (R) : அதிகமான விதிகளை கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட திருத்தச்சட்டம்.

(A) கூற்று(A)ம், காரணம் (R)ம் சரியானவைகள் ஆகும். காரணம் (R) கூற்று (A)க்கான சரியான விளக்கமாகும்

(B) கூற்று(A)ம் காரணம் (R)ம் சரியானவைகளாகும். ஆனால் காரணம் (R) கூற்று(A)க்கான சரியாக விளக்கவில்லை

(C) (A) கூற்று சரி ஆனால் காரணம் (R) தவறு

(D) (A) கூற்று தவறு ஆனால் காரணம் (R) சரி

(E) விடை தெரியவில்லை

Parliament and the ratification of half of the state legislatures.




$42^{nd}$ amendment of the Constitution is known as the mini Constitution.

176

கீழ்க்காணும் சொற்கள் முகப்புரையில் எந்த வரிசையில் இடம் பெற்றுள்ளன?

1. மக்களாட்சி
2. சமதர்மம்
3. இறையாண்மை
4. மதசார்பின்மை
5. குடியரசு

(A) 3, 2, 4, 1, 5

(B) 2, 3, 4, 1, 5

(C) 3, 2, 1, 4, 5

(D) 3, 1, 2, 5, 4

(E) விடை தெரியவில்லை

சொற்களுடன் இந்திய அரசியலமைப்பின் முகவுரை தொடங்குகிறது. இது இந்திய அரசியலமைப்புத் தனது அதிகாரத்தை மக்களிடமிருந்து பெறப்பட்டதைத் தெளிவுபடுத்துகிறது. இதிலிருந்து, இந்திய மக்களே இந்திய அரசியலமைப்பின் ஆதாரம் என நாம் கூறமுடியும். இந்தியா ஒரு இறையாண்மைமிக்க, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசு என நமது அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது. இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி என அனைத்திலும் பாதுகாப்பு வழங்குவதே இதன் நோக்கமாகும். இந்திய மக்கள் அனைவருக்கும் சுதந்திரமாகச் சிந்தித்தல், உணர்வுகளை வெளிப்படுத்துதல், நம்பிக்கை, சமய

## பொதுத்தமிழ்

### பகுதி அ - இலக்கணம்

| NO | TOPICS | SCHOOL BOOK |
|---|---|---|
| 1 | பொருத்துதல் பொருத்தமான –<br>i) பொருளைத் தேர்வு செய்தல்;<br>ii) புகழ் பெற்ற நூல் நூலாசிரியர் | ஓவ்வொரு பாடப்பகுதியின் இறுதியில் உள்ள சொல்லும் பொருளும் பகுதி , நூல்வெளி ஆகியவற்றை படிக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| 2 | தொடரும் தொடர்பும் அறிதல்<br>(i) இத்தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர்<br>(ii) அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல் | ஒவ்வொரு பாடப்பகுதியின் இறுதியில், நூல்வெளி பகுதியை படிக்க வேண்டும் |
| 3 | பிரித்தெழுதுக | ஒவ்வொரு பாடப்பகுதியின் இறுதியில் உள்ள மதிப்பீட்டுப் பகுதியில் உள்ள பிரித்தெழுதுக |
| 4 | எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல் | பாடப்புத்தகத்தில் ஆங்காங்கே கொடுக்கப்பட்டிருக்கும், இதனை தவிர்த்தும் பிற கேள்விகள் கேட்கலாம் |
| 5 | பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல் | ஏதேனும் ஒரு பொருள் அல்லது பொதுவான சொற்கள் கொடுக்கப்பட்டு அதிலிருந்து வேறுபட்ட பொருளை தெரிவு செய்யும் நோக்கில் இருக்கும். |
| 6 | பிழை திருத்தம்<br>(i) சந்திப்பிழையை நீக்குதல்<br>(ii) ஒருமை பன்மை பிழைகளை நீக்குதல் மரபுப் பிழைகள், வழுவுச் சொற்களை நீக்குதல் / பிறமொழிச் சொற்களை நீக்குதல் | பள்ளிப் புத்தகத்தில் ஒவ்வோர் பாடத்திலும் உள்ள இலக்கணக் பகுதியை புரிந்து கற்றால் இதற்கான விடையை எளிமையாக கண்டறியலாம் |
| 7 | ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல் | மொழி அறிவோம் பகுதி |
| 8 | ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல் | பொருள் அறிந்து படித்து விடையளிக்கலாம் |
| 9 | ஓரெழுத்து ஒருமொழி உரிய பொருளைக் கண்டறிதல் | 52 எழுத்துகளுக்கான பொருள் |
| 10 | வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |
| 11 | வேர்ச்சொல்லைக் கொடுத்து வினைமுற்று /, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற் பெயரை உருவாக்கல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |
| 12 | அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| 13 | சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |
| 14 | பெயர்ச்சொல்லின் வகையறிதல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |
| 15 | இலக்கணக் குறிப்பறிதல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |
| 16 | விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |
| 17 | எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |
| 18 | தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |
| 19 | உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |
| 20 | எதுகை, மோனை, இயைபு இவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெழுதுதல் | இலக்கணம் -புரிதல் அடிப்படையில் |
| 21 | பழமொழிகள் | |

**படிக்கும் முறை**

⇒ **6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள தமிழ் பாடப்புத்தகத்தில் சொல்லும் பொருளும்**

**உதாரணம் 6 ஆம் வகுப்பு தமிழ்**

**சொல்லும் பொருளும்**

நிருமித்த - உருவாக்கிய விளைவு - வளர்ச்சி
சமூகம் - மக்கள் குழு அசதி - சோர்வு

⇒ **தெரிந்து தெளிவோம்**

**உதாரணம் 7 ஆம் வகுப்பு தமிழ்**

## தெரிந்து தெளிவோம்

'பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்தநிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவையே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு. எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும்'

– மு.வரதராசனார்

⇒ **கற்பவை கற்ற பின்**

## கற்பவை கற்றபின்

1. "எங்கள் தமிழ்" – பாடலை இசையுடன் பாடி மகிழ்க.
2. பின்வரும் நாமக்கல் கவிஞர் பாடலைப் படித்துச் சுவைக்க.

*கத்தி யின்றி ரத்த மின்றி*
*யுத்த மொன்று வருகுது*
*சத்தி யத்தின் நித்தி யத்தை*
*நம்பும் யாரும் சேருவீர்!... (கத்தியின்றி...)*
*கண்ட தில்லை கேட்ட தில்லை*
*சண்டை யிந்த மாதிரி*
*பண்டு செய்த புண்ணி யந்தான்*
*பலித்த தேநாம் பார்த்திட!... (கத்தியின்றி...)*

⇒ **இலக்கணம்**

**ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் இருக்கும் இலக்கணப் பகுதி**

⇒ **மொழியை ஆள்வோம் பகுதியில் உள்ளவை**

### அகரவரிசைப்படுத்துக.

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம்.

-----------------------------------------------------

-----------------------------------------------------

### அறிந்து பயன்படுத்துவோம்.

#### மரபுத் தொடர்கள்

தமிழ் மொழிக்கெனச் சில சொல் மரபுகள் உள்ளன. அவை பழங்காலம் முதலே பின்பற்றப்படுகின்றன.

#### பறவைகளின் ஒலிமரபு

| | | |
|---|---|---|
| ஆந்தை அலறும் | குயில் கூவும் | மயில் அகவும் |
| காகம் கரையும் | கோழி கொக்கரிக்கும் | கிளி பேசும் |
| சேவல் கூவும் | புறா குனுகும் | கூகை குழறும் |

⇒ **நிற்க அதற்குத் தக**

### நிற்க அதற்குத் தக...

#### என் பொறுப்புகள்...

1. எழுத்துகளைச் சரியான வரிவடிவத்தில் எழுதுவேன்.
2. அறிவிப்புப் பலகைகளில் உள்ள பிழைகளை உரியவரிடம் கூறித் திருத்தச்செய்வேன்.

#### கலைச்சொல் அறிவோம்.

| | | | |
|---|---|---|---|
| ஒலிபிறப்பியல் | – *Articulatory phonetics* | உயிரொலி | – *Vowel* |
| மெய்யொலி | – *Consonant* | அகராதியியல் | – *Lexicography* |
| மூக்கொலி | – *Nasal consonant sound* | ஒலியன் | – *Phoneme* |
| கல்வெட்டு | – *Epigraph* | சித்திர எழுத்து | – *Pictograph* |

**மாதிரி கேள்விகள் ( ஏற்கனவே உள்ள தேர்வில் கேட்கப்பட்டவை)**

பொருளுக்கு ஏற்ற பொருத்தமான உவமையைத் தேர்ந்தெடுத்து எழுதுக
'காத்திருந்து ஏமாந்து போவது'

(A) மழைமுகம் காணாப் பயிர் போல

(B) இலவு காத்த கிளி போல

(C) அனலிடைப்பட்ட புழு போல

(D) கிணற்றுத் தவளை போல

இரண்டு அடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும் பா

(A) வெண்பா

(B) ஆசிரியப்பா

(C) வஞ்சிப்பா

(D) கலிப்பா

'Whats App' என்ற சொல், பார்க்கவும் கேட்கவும் படிக்கவுமான மின்னஞ்சல் குறுஞ்செய்தி வசதியை முனைவர் ம. இராசேந்திரன் ———— என மொழி பெயர்த்துள்ளார்.

(A) தூதுலாவி

(B) கட்செவி அஞ்சல்

(C) எண்ண நகலி

(D) தூது செயலி

'நவ்வி' எனும் சொல்லின் பொருள்

(A) மான் (B) நாய்

(C) நரி (D) செந்நாய்

பொருத்துக :

(a) வண்டு 1. குனுகும்

(b) புறா 2. அலப்பும்

(c) பூனை 3. முரலும்

(d) குரங்கு 4. சீறும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

பிறமொழிச் சொற்களை நீக்கித் தூய தமிழில் உள்ளதை எழுதுக

(A) நீ தான் என் அத்யந்த ஸ்நேகிதன் என்று கூறிச் சந்தோஷித்தான்

(B) நீ தான் என் நெருங்கிய நண்பன் என்று கூறி மகிழ்ச்சி அடைந்தான்

(C) நீ தான் என் அத்யந்த நண்பன் என்று கூறிச் சந்தோஷம் அடைந்தான்

(D) நீ தான் என் அத்யந்த நண்பன் என்று கூறி சந்தோஷப்பட்டான்

## பகுதி -ஆ இலக்கியம்

1. திருக்குறள் தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், தொடரை நிரப்புதல் (இருபத்தைந்து அதிகாரம் மட்டும்) அன்பு, பண்பு, கல்வி, கேள்வி, அறிவு, அடக்கம், ஒழுக்கம், பொறை, நட்பு, வாய்மை, காலம், வலி, ஒப்புரவறிதல், செய்நன்றி, சான்றாண்மை , பெரியாரைத் துணைக் கோடல், பொருள்செயல்வகை, வினைத்திட்பம், இனியவை கூறல், ஊக்கமுடைமை, ஈகை, தெரிந்து செயல்வகை, இன்னா செய்யாமை, கூடா நட்பு, உழவு.

2. அறநூல்கள் - நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு முதுமொழிக் காஞ்சி, திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஔவையார் பாடல்கள் தொடர்பான செய்திகள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பிற செய்திகள்.

3. கம்பராமாயணம், இராவண காவியம் தொடர்பான செய்திகள், பாவகை, சிறந்த தொடர்கள்.

4. புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு கலித்தொகை தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், அடிவரையறை, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் உள்ள பிற செய்திகள்.

5. சிலப்பதிகாரம் - மணிமேகலை தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், சிறந்த தொடர்கள், உட்பிரிவுகள் மற்றும் ஐம்பெரும்-ஐஞ்சிறுங் காப்பியங்கள் தொடர்பான செய்திகள்.

6. பெரிய புராணம் - நாலாயிர திவ்வியப்பிரபந்தம் - திருவிளையாடற் புராணம் - தேம்பாவணி - சீறாப்புராணம் தொடர்பான செய்திகள்.

7. சிற்றிலக்கியங்கள் : திருக்குற்றாலக்குறவஞ்சி - கலிங்கத்துப்பரணி - முத்தொள்ளாயிரம், தமிழ்விடு தூது - நந்திக்கலம்பகம் - முக்கூடற்பள்ளு - காவடிச்சிந்து - முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் - இராஜராஜ சோழன் உலா - தொடர்பான செய்திகள்.


8. மனோன்மணியம் - பாஞ்சாலி சபதம் - குயில் பாட்டு - இரட்டுற மொழிதல் (காளமேகப் புலவர்) - அழகிய சொக்கநாதர் தொடர்பான செய்திகள்.

9. நாட்டுப்புறப் பாட்டு - சித்தர் பாடல்கள் தொடர்பான செய்திகள்.

10. சமய முன்னோடிகள் - அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர், குலசேகர ஆழ்வார், ஆண்டாள், சீத்தலைச் சாத்தனார், எச்.ஏ.கிருட்டிணனார், உமறுப்புலவர் தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், சிறப்புப் பெயர்கள்.

**2.** **இது மாதிரி வகுப்பு வாரியாக படிக்க வேண்டும்**

**3.**



"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்"
என்று திருக்குறளின் பெருமையை ஔவையார் போற்றுகிறார். மனித சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கி, அஃது எவ்வாறு வாழ வேண்டும் என்று நன்கு சிந்தித்து எழுதப்பட்ட நூல் திருக்குறள். இது போன்ற ஒரு நூல் உலகில் எந்த மொழியிலும் இதுவரை தோன்றியது இல்லை என்பர். அத்தகைய பெருமைமிகு திருக்குறளைப் படிப்போம்.

**படிக்கும் முறை**

⇒ **உரை நடையின் ஊடே இந்த நூல்கள் தொடர்பான செய்தி ஏதேனும் தென்பட்டால் அவற்றையும் மேலும் கசடறக் கற்க போன்ற பகுதிகளில் வருபவற்றையும் படிக்க வேண்டும்**

⇒ **நூல் வெளி என்ற தலைப்பில் மேலே குறிப்பிடப்பட்ட நூலாசிரியர் பற்றி படிக்க வேண்டும்**

## கற்பவை கற்றபின்

1. கல்வி குறித்து வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.
2. கற்றோரின் சிறப்புகளைப் பற்றிப் பிற நூல்களில் இடம்பெற்ற பாடல்களைத் தொகுத்து எழுதுக.
3. பின்வரும் நாலடியார் பாடலைப் படித்துச் சுவைக்க.

கல்வி கரையில கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கின் பிணி பல – தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து

⇒ **தனியாகவே இந்த நூல்கள் இடம் பெற்றிருக்கும் அவ்வற்றையும் சேர்த்து படிக்க வேண்டும்**

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிவியல், தொழில்நுட்பம் | செயற்கை நுண்ணறிவு | 76 | |
| | | பெருமாள் திருமொழி* | 82 | |
| | | பரிபாடல் | 83 | ஜூலை |
| | நான்காம் தமிழ் | விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை | 85 | |
| | | இலக்கணம் – பொது | 90 | |
| 6 | கலை, அழகியல், புதுமைகள் | நிகழ்கலை | 128 | |
| | | பூத்தொடுத்தல் | 133 | |
| | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்* | 134 | |
| | நிலா முற்றம் | கம்பராமாயணம்* | 136 | ஆகஸ்ட் |
| | | பாய்ச்சல் | 139 | |
| | | அகப்பொருள் இலக்கணம் | 144 | |
| | | திருக்குறள் | 154 | |

**இந்தத் தலைப்புகளில் ஏற்கனவே கேட்கப்பட்ட வினாக்கள் மாதிரி**

'ஊக்கம் உடையான் ஒடுக்கம்' – எதைப் போன்றது

(A) பதுங்கும் புலி
(B) வளைந்து நிற்கும் வில்
(C) பின்வாங்கி நிற்கும் ஆடு ✓
(D) சீறும் பாம்பு

'தமிழ்மாதின் இனிய உயிர்நிலை' எனப் போற்றப்படும் நூல்

(A) கம்பராமாயணம்

(B) சிலப்பதிகாரம்

(C) திருக்குறள்

(D) நாலடியார்

"பரணிக்கோர் சயங்கொண்டான்"

என்று கலிங்கத்துப்பரணியை இயற்றிய புலவரைப் புகழ்ந்தவர்

(A) பலபட்டடைச் சொக்கநாதர்

(B) குமரகுருபரர்

(C) தாயுமானவர்

(D) இராமலிங்கர்

'உலா' எனும் சிற்றிலக்கியம் பாடப்பெறும் பாவகை

(A) கலிவெண்பா

(B) ஆசிரியப்பா

(C) விருத்தப்பா

(D) வஞ்சிப்பா

'திருச்செந்திற் கலம்பகம்' என்னும் நூலை இயற்றியவர்

(A) ஞானதேசிகர்

(B) ஈசான தேசிகர்

(C) தெய்வசிகாமணி

(D) முத்துகுமாரசாமி

'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்'

– என ஓவியருக்கு இலக்கண உரை வகுத்தவர்

(A) தொல்காப்பியர்

(B) அடியார்க்கு நல்லார்

(C) நச்சினார்க்கினியர்

(D) அகத்தியர்

தேம்பாவணியில் 'வளன்' என்னும் பெயர்ச்சொல்லால் குறிக்கப்படுபவர்

(A) இயேசு கிறிஸ்து
(B) சூசை மாமுனிவர்
(C) தாவீது
(D) கோலியாத்து

"களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இதுவென் கொல்"
– இங்ஙனம் கூறியவர்

(A) மதுரை மக்கள்
(B) கவுந்தி அடிகள்
(C) சீத்தலைச் சாத்தனார்
(D) கண்ணகி

நெஞ்சாற்றுப்படை என அழைக்கப்படும் நூல்

(A) குறிஞ்சிப்பாட்டு
(B) முல்லைப் பாட்டு
(C) பட்டினப்பாலை
(D) மதுரை காஞ்சி

'தேவார மூவர்' எனப்படுவோர்

(A) திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், மணிவாசகர்
(B) அப்பர், சுந்தரர், மணிவாசகர்
(C) நம்பி ஆரூரன், மணிவாசகர், திருநாவுக்கரசர்
(D) சம்பந்தர், அப்பர், சுந்தரர்

வாய்மை

7. *வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்.*

பொருள்: வாய்மை எனப்படுவது மற்றவர்க்கு ஒரு தீங்கும் தராத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

8. *தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன்நெஞ்சே தன்னைச் சுடும்.*

பொருள்: ஒருவர் தன் நெஞ்சறிய பொய் சொல்லக்கூடாது. அவ்வாறு கூறினால் அவர் நெஞ்சமே அவனை வருத்தும்.

## பகுதி – இ தமிழ் அறிஞர்களும், தமிழ்த் தொண்டும்

1. பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகனார் தொடர்பான செய்திகள், சிறந்த தொடர்கள், சிறப்புப் பெயர்கள்.
2. மரபுக் கவிதை – முடியரசன், வாணிதாசன், சுரதா, கண்ண தாசன், உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி தொடர்பான செய்திகள், அடைமொழிப் பெயர்கள்.
3. புதுக்கவிதை – ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, தருமு சிவராமு, பசுவய்யா, இரா.மீனாட்சி, சி.மணி, சிற்பி, மு.மேத்தா, ஈரோடு தமிழன்பன், அப்துல்ரகுமான், கலாப்ரியா, கல்யாண்ஜி, ஞானக்கூத்தன் – தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், சிறப்புத் தொடர்கள் மற்றும் எழுதிய நூல்கள்.
4. தமிழில் கடித இலக்கியம் – நாட்குறிப்பு, ஜவகர்லால் நேரு, மகாத்மா காந்தி, மு.வரதராசனார், பேரறிஞர் அண்ணா தொடர்பான செய்திகள்.
5. நிகழ்கலை (நாட்டுப்புறக் கலைகள்) தொடர்பான செய்திகள்.
6. தமிழில் சிறுகதைகள் தலைப்பு – ஆசிரியர் – பொருத்துதல்.
7. கலைகள் – சிற்பம் – ஓவியம் – பேச்சு – திரைப்படக்கலை தொடர்பான செய்திகள்.
8. தமிழின் தொன்மை – தமிழ்மொழியின் சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள்
9. உரைநடை – மறைமலை அடிகள், பரிதிமாற்கலைஞர், ந.மு. வேங்கடசாமி நாட்டார், ரா.பி. சேது, திரு.வி.கல்யாண சுந்தரனார் வையாபுரி, பேரா.தனிநாயகம் அடிகள், செய்குதம்பி பாவலர் – மொழி நடை தொடர்பான செய்திகள்.
10. உ.வே.சாமிநாதர், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், சி.இலக்குவனார் – தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள்.

11. தேவநேயப்பாவாணர் - அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழ்த்தொண்டு தொடர்பான செய்திகள்.

12. ஜி.யு.போப் - வீரமாமுனிவர் தமிழ்த்தொண்டு சிறப்புத் தொடர்கள்.

13. தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்துராமலிங்கர் - அம்பேத்கர் - காமராசர் - ம.பொ.சிவஞானம் - காயிதேமில்லத் - சமுதாயத் தொண்டு.

14. தமிழகம் - ஊரும் பேரும், தோற்றம் மாற்றம் பற்றிய செய்திகள்.

15. உலகளாவிய தமிழர்கள் சிறப்பும் - பெருமையும் - தமிழ்ப் பணியும்.

16. தமிழ்மொழியின் அறிவியல் சிந்தனைகள் தொடர்பான செய்திகள்.

17. தமிழ் மகளிரின் சிறப்பு - மூவலூர் ராமாமிர்தம்மாள், டாக்டர் முத்துலட்சுமி அம்மையார், வேலு நாச்சியார் மற்றும் சாதனை மகளிர் - விடுதலைப் போராட்டத்தில் மகளிர் பங்கு - தில்லையாடி வள்ளியம்மை, ராணி மங்கம்மாள், அன்னி பெசன்ட் அம்மையார்.

18. தமிழர் வணிகம் - தொல்லியல் ஆய்வுகள் - கடற் பயணங்கள் -தொடர்பான செய்திகள்.

19. உணவே மருந்து - நோய் தீர்க்கும் மூலிகைகள் தொடர்பான செய்திகள்.

20. சமயப் பொதுமை உணர்த்திய தாயுமானவர், இராமலிங்க அடிகளார், திரு.வி.கல்யாண சுந்தரனார் தொடர்பான செய்திகள் - மேற்கோள்கள்.

21. நூலகம் பற்றிய செய்திகள்.

## படிக்க வேண்டிய புத்தகங்கள்

- ⇒ **6 முதல் 12 வரையுள்ள பொதுத் தமிழ் புத்தகம் ( 2019 பதிப்பு)**
- ⇒ **பழைய பொதுத்தமிழ் வினாக்கள் 2013 ஆம் ஆண்டிலிருந்து**

**படிக்கும் முறை**

- ⇒ **உரை நடையின் ஊடே இந்த நூல்கள் தொடர்பான செய்தி ஏதேனும் தென்பட்டால் அவற்றையும் மேலும் கசடறக் கற்க போன்ற பகுதிகளில் வருபவற்றையும் படிக்க வேண்டும்**
- ⇒ **நூல் வெளி என்ற தலைப்பில் மேலே குறிப்பிடப்பட்ட நூலாசிரியர் பற்றி படிக்க வேண்டும்**

| | | | |
|---|---|---|---|
| அறம், தத்துவம், சிந்தனை | பெரியாரின் சிந்தனைகள் | 210 | |
| | ஒளியின் அழைப்பு | 215 | |
| என்தலைக் கடனே | தாவோ தே ஜிங் | 217 | ஜனவரி |
| | யசோதர காவியம் * | 219 | |
| | மகனுக்கு எழுதிய கடிதம் | 220 | |
| | யாப்பிலக்கணம் | 223 | |


மொழிகளும் இங்குப் பேசப்படுவதால் இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று ச. அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் குறிப்பிடத்தக்க, பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று. மொகஞ்சதாரோ – ஹரப்பா அகழாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் திராவிட நாகரிகம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி எனப்படுகிறது. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர். தமிழ் என்னும் சொல்லிலிருந்துதான் திராவிடா என்னும் சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஹீராஸ் பாதிரியார் என்பார் இம்மாற்றத்தைத் தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என்று வந்ததாக விளக்குகின்றார்.

ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனவும் பெயரிட்டார். இதனையொட்டி, மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஹோக்கன் என்பார் இம்மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டதோடு ஆரிய மொழிகளிலிருந்து இவை மாறுபட்டவை என்றும் கருதினார். மாக்ஸ் முல்லரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார்.

1856இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல், திராவிட மொழிகள், ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

### நூல் வெளி



ஈரோடு தமிழன்பன் எழுதிய 'தமிழோவியம்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள கவிதை இது. இக்கவிதை குறித்துக் கவிஞர் முன்னுரையில் "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார். ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார். இவரது 'வணக்கம் வள்ளுவ' என்னும் கவிதை நூலுக்கு 2004ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. 'தமிழன்பன் கவிதைகள்' தமிழக அரசின் பரிசுபெற்ற நூல். இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

என்று கலித்தொகை விவரிக்கிறது.

கலித்தொகை தவிர, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களிலும் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

ஏறு தழுவுதல் பற்றிப் பிற்காலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பள்ளு இலக்கியத்திலும் குறிப்புகள் உள்ளன. எருதுகட்டி என்னும் மாடு தழுவுதல் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்துள்ளது.

இடம்பெற்றுள்ளன.

மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்ட எருது பொருதார் கல் ஒன்று உள்ளது. கோவுரிச் சங்கன் கருவந்துறையிலே எருது விளையாடிப் பட்டான் சங்கன் மகன் பெரிய பயலு நட்டகல்லு என்பது அந்நடுகல் பொறிப்பு. கருவந்துறை என்னும் ஊரில் எருதோடு போராடி இறந்துபட்டவனாகிய சங்கன் என்பவனுக்கு அவனுடைய மகன் பெரிய பயல் எடுத்த நடுகல் என்பது இதன் பொருள்.

## இலக்கியங்களில் அறிவியல்

புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி

புறநானூறு
பாடல் 27, அடி 7–8.

*அந்தரத் தார்மய னேஎன ஐயுறும்*
*தந்திரத்தால் தம நூல்கரை கண்டவன்*
*வெந்திற லான், பெருந் தச்சனைக் கூவி,"ஓர்*
*எந்திர வூர்திஇ யற்றுமின்" என்றான்.*

– *சீவக சிந்தாமணி*
நாமகள் இலம்பகம் 50.

*ஆணும் பெண்ணும் இயற்கைப் படைப்பிலே*
*சமம் என்று நினைச்சாங்க – முன்னோர்கள்*
*சரியாக வாழ்ந்தாங்க...*
*இடையில் குடிபுகுந்த மூடப்பழக்கங்களால்*
*பெண்களைத் தாழ்த்தினாங்க – சமத்துவத்தை*
*அடியோடு வீழ்த்தினாங்க...*

குழுவினர்: அது சரிண்ணே, இன்று பெண்கள் நல்லாப் படிச்சு உயர்ந்த பதவியெல்லாம் பெற்று நாட்டையே ஆளறாங்க. இந்த நிலை எப்படிண்ணே வந்தது?

குழுத்தலைவர்: அது, ஒரு நூற்றாண்டு கால வரலாறு தம்பி. இந்த நிலையை அடைய அவங்க பட்டபாடு சொல்லி முடியாது.

குழுவினர்: அதைத்தான், கேட்கறேன் விரிவாகச் சொல்லுங்கண்ணே!

குழுத்தலைவர்:
*அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதுக்கு என்று*

### பெண்மை – புரட்சி



முத்துலெட்சுமி
(1886 – 1968)

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்

இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930இல் அவ்வை இல்லம், 1952இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

குழுவினர்: என்ன இருந்காலம்

தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காணமுடிகிறது. கல்வெட்டுகள் கி.மு. (பொ.ஆ.மு.) மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் கி.பி. (பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.

வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும். தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவம் ஆகும். சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம்பெற்றுள்ளன. முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.

உரைநடை உலகம்

இயல் மூன்று

# தமிழர் மருத்துவம்

(நேர்காணல்)

3WYKI5




மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (குறள் 942)

என்றார் திருவள்ளுவர். அருந்தும் உணவே அருமருந்தென அறிந்தவர் நம் தமிழ் மக்கள். தமிழ்மக்கள் உடற்கூறுகள் பற்றிய அறிவிலும், மருத்துவம் பற்றிய புரிதலிலும் சிறந்து விளங்கினர்; உலகில் பல்வேறு மருத்துவ முறைகள் இருந்தாலும் தமக்கென மரபுசார்ந்த மருத்துவ முறைகளை உருவாக்கிப் பின்பற்றி வந்தனர். அத்தகைய தமிழர் மருத்துவ முறைகள் பற்றிய செய்திகளைச் சித்த மருத்துவர் கு. சிவராமன் அவர்களிடம் உரையாடி அறிவோம்.



நூல் வெளி

கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது கலிப்பா என்னும் பாவகையால் ஆன நூல்; நூற்று ஐம்பது பாடல்களைக் கொண்டது. குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி, பாலைக்கலி என்னும் ஐந்து பிரிவுகளை உடையது. கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். நெய்தற்கலிப் பாடல்களை இயற்றியவரும் இவரே.

**கேள்விகள் கேட்கப்பட்ட விதம்**

பட்டியல் I-இல் உள்ள சொற்களை பட்டியல் II-இல் உள்ள சொற்களோடு பொருத்திக் கீழே உள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | அறுவை வீதி | 1. | மள்ளர் வாழும் வீதி |
| (b) | கூல வீதி | 2. | பொற் கடை வீதி |
| (c) | பொன் வீதி | 3. | தானியக் கடை வீதி |
| (d) | மள்ளர் வீதி | 4. | ஆடைகள் விற்கும் கடை வீதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்

இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"

(A) பாரதியார

(B) பாரதிதாசன்

(C) வாணிதாசன்

(D) கம்பதாசன்

'தமிழ் நாடகக்கலைக்கு ஒரு பெர்னாட்ஷா' எனப் பாராட்டப் பெற்றவர்

(A) சங்கரதாச சுவாமிகள்

(B) பம்மல் சம்மந்த முதலியார்

(C) அறிஞர் அண்ணா

(D) தி.க. சண்முகம்

நேயர் விருப்பம், விலங்குகள் இல்லாத கவிதை ஆகிய நூல்களை இயற்றியவர்

(A) தாரா பாரதி

(B) அப்துல் ரகுமான்

(C) ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

(D) மீரா

பேராயக் (காங்கிரஸ்) கட்சியிலிருந்து விலகிய பின், தந்தை பெரியார் தம்மை இணைத்துக் கொண்ட இயக்கம்

(A) நீதிக்கட்சி

(B) சுயராச்சியக் கட்சி

(C) திராவிடர் கழகம்

(D) பொதுவுடைமைக் கட்சி

தமிழகத்தை எழுபத்திரண்டு பாளையங்களாகப் பிரித்து ஆண்டவர்கள்

(A) பாண்டியர்கள்

(B) நாயக்கர்கள்

(C) சேரர்கள்

(D) சோழர்கள்

திரு.வி.கல்யாணசுந்தரனார் எழுதாத நூல்

(A) முருகன் அல்லது அழகு

(B) நாயன்மார் வரலாறு

(C) தமிழ்நாடும் நம்மாழ்வாரும்

(D) சத்தியவேத கீர்த்தனைகள்